# *புனித யெருசலேம் சிரில் (315 – 385)*

இவர் உலக கலைகளை நன்கு கற்றார். திருச்சபையின் முதுபெரும் தந்தையர் எழுதிய நூல்களைப் படித்தார். வேத புத்தகங்களை வெகு கவனத்துடன் வாசித்து வந்தார். பின் யெருசலேம் நகரத்திற்கு ஆயர் ஆனார். அப்பொழுது திருச்சபைக்கு உபத்திரவம் மிகுந்த காலம். ஆரிய பதிதக் கொள்கை பரவி பெரும் தீமை விளைவித்தது. இவர் 36 ஆண்டுகளாக ஆயராய் இருந்ததில் 17 ஆண்டுகளை பரதேச வாசத்தில் செலவழித்தார். காரணம், அவர் உண்மையை ஆதரித்துப் பேசியதே, ஜீலியன் என்பவன் வேத துரோகி கிறஸ்தவனாக இருந்து பின் கிறிஸ்துவை மறுதலித்தவன். கிறிஸ்துநாதரின் வாக்கை பொய்யாக்கும்படி யெருசலேம் ஆலயத்தை அவன் திரும்ப கட்ட முயற்சித்தான். கடவுள் அவனது முயற்சிகளை தவிடு பொடியாக்கினார். இதையெல்லாம் சிரில் தமது கண்களால் கண்டார்.

**சிந்தனை:**

"கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றி நாம் வெட்கப்படக் கூடாது. சிலுவையைக் கண்டு சாத்தான் நடுங்கிக் கொண்டு ஓடுகிறது. உணவு, நீர், அருந்தும் பொழுதும், உட்காரும் பொழுதும், படுக்கும் பொழுதும், எழுந்து இருக்கும் பொழுதும், நடக்கும் பொழுதும் ஒவ்வொரு செய்கைக்கு முன்னும் சிலுவை அடையாளம் வரையவும்". (புனித யெருசலேம் சிரில்)




**செபம்:**

ஓ! சிலுவையே, எங்கள் ஏக நம்பிக்கையே வாழ்க!